**கவனிக்க.**- *2016.05.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1968 - 2016 මැයි මස 20 වැනි සිකුරාදා - 2016.05.20**

*1968 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 678 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 690 |


**கவனிக்க.**- *அக்குறணை பைதுஸ் ஸகாத் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஆனி மாதம் 20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, வைகாசி 4.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | எருக்கலம்பிட்டி பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

5-577

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஆனி மாதம் 20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மே 03.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | திருகோணமலை | திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

5-578

## அரச சேவைகள் ஆணைக்குழு

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு

### இலங்கையில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III இல் 207 (இருநூற்று ஏழு) கால்நடை மருத்துவ அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகைமையுடையவர்களைத் தெரிவுசெய்வதற்காக கால்நடை மருத்துவ விஞ்ஞானப் பட்டதாரிகளிடமிருந்து அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் முடிவிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், த. பெ. இல. 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி பதவி" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2016.06.17 ஆகும்.

**குறிப்பு.-** விண்ணப்பப்படிவம் அல்லது அதன் தொடர்பிலான கடிதங்கள் தபாலில் அனுப்பும்போது காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

**1. ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

(i) கால்நடை மருத்துவ அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வது பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தினால் வெளியிடப்படும் திறமை பட்டியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பல்கலைக் கழகமொன்றில் கால்நடை மருத்துவ பட்டத் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள், இலங்கை கால்நடை மருத்துவச் சபையில் பதிவுசெய்வ தற்கான தகைமையைப் பூர்த்திசெய்துள்ள ஆண்டுக்கான பதிவுத் திகதியின் வரிசைக் கிரமப்படி திறமைப் பட்டியலில் கடைசியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) வெற்றிட எண்ணிக்கையில் நூற்றுக்கு நூற்றுப்பத்து (110%) வீதத்துக்குச் சமமான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், திறமைப் பட்டியலின் தொடர் முறையின் பிரகாரம் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(iii) நியமனதாரிகளின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி, அரச சேவைகள் ஆணைக் குழுவின் கட்டளையின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

**2. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) நியமனம் நிரந்தரமானது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை பற்றி அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு உடன்படல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை மருத்துவ அதிகாரி பதவியினை நிரப்பு வதற்காக நியமிக்கப்படுவர்.

(iii) பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 01/ 2014 இன் பிரகாரம் மற்றும் அது தொடர்பான சுற்றுநிருபங்கள் பிரகாரமும் குறித்த மட்டத்தில் தேர்ச்சியை அடைந்திருத்தல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழியில் சேவையில் ஈடுபடுத்த தகைமை பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் உறுதிப்படுத்த முன்னர் அரச கரும மொழி ஒன்றில் III ஆம் மட்டத்தில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) இந்நியமனம் தொடர்பான ஏனைய சேவைக் கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் 1840/ 51 ஆம் இலக்க 2013.12.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் நியதிச் சட்டக்கோவை மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் திருத்த கட்டளைகளுக்கும் அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை நியதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் திணைக்களங்களுக்கான ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

**3. சம்பள அளவுத்திட்டம்.-** இப்பதவிக்கு 2016.02.25 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் உப பிரிவு I இன் பிரகாரம் ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - 1,10,895. (SL-1-2016) மாதாந்தச் சம்பள அளவு உரித்துடையதாகும். தங்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் உப பிரிவு II இன் குறிப்பிட்டவாறு ஆகும்.

(உ+ம் : 2016.01.01 ஆந் திகதி முதல் 2016.12.31 ஆந் திகதி வரை ஏற்புடைமை ஆவது ரூ. 27,871 ஆகிய அடிப்படைச் சம்பளம் மற்றும் ரூ. 9,651 ஆகிய கொடுப்பனவு ஆகும்.)

4. **கல்வித் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கால்நடை மருத்துவ விஞ்ஞானம் பற்றிய பட்டம்.

5. **வயதெல்லை.**- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமை :**

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கை நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பணிபுரிவதற்கும்,

(ii) பதவியில் கடமையாற்றுவதற்குப் போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டிய அதே வேளை சிறந்த தேகாரோக்கிய நிலை மருத்துவ பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) கால்நடை மருத்துவப் பட்டதாரியாகச் செல்லுபடியாகும் திகதி 2015.12.31 அல்லது அதற்கு முன்னைய திகதியாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்திலும் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று, இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் அனைத்து வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **நேர்முகப் பரீட்சை :**

8.1 பொதுவான நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).- நிறைவேற்றுவதற்கு உத்தேச நோக்கங்கள்.- ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா ? என்பதனைப் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமைகளைப் பரிசீலித்தல்.

9. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்படிவம் 22-29 செ. மீ. அளவில் A4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்ட பின்னர் கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(a) பிறப்புச் சான்றிதழ் ;

(b) பட்டம் மற்றும் அதன் தொடர்பிலான சான்றிதழ்கள் ;

(c) அண்மையில் பெறப்பட்ட இரண்டு நன் நடத்தைச் சான்றிதழ்கள் (அதில் ஒன்று பிரதேச கிராம உத்தியோகத்தரிடம் பெறப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிசெய்யப்படல் வேண்டும்) ;

(d) சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்துள்ள உயர் பரீட்சைகளின் சான்றிதழ் ;

(e) கால்நடை மருத்துவராக இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்.

10. **வேறு ஏற்பாடுகள் :**

(i) இவ்வர்த்தமானி அறிவித்தலில் விதிக்கப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

(ii) வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாமை அல்லது ஒரு பகுதியை மாத்திரம் நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரச சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

(iii) இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரி ஒருவருக்கு தகைமைகள் இல்லை யென வெளிப்படும் பட்சத்தில் அவரின் அபேட்சகத் தன்மை இரத்துச்செய்யப்படும்.

(v) விண்ணப்பதாரி ஒருவரினால் முன்வைக்கப்பட்டுள்ள ஏதாவது விடயமொன்று பிழையானது எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என வெளிப்படுமாயின், அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்று வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் அவரை சேவையிலிருந்து நீக்க முடியும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டி. கே. ஆர். ஏக்கநாயக்க,
செயலாளர்,
கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

2016, மே 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3. தபால் முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின் உடனடியாக அதுபற்றி அறிவிக்கப்படல் வேண்டும்) : ----.

4. நிரந்தர வதிவிடத்தைச் சேர்ந்த-

(i) மாகாணம் :----.

(ii) மாவட்டம் :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. (அ) நீங்கள் இலங்கை பிரசையா என்பது பற்றி :----.

(ஆ) இனம் (சிங்களவர்/ இலங்கைத் தமிழர்/ இந்தியத் தமிழர்/ முஸ்லிம்கள்/ ஏனையவை) :----.

7. (அ) பால் (ஆண்/ பெண்) :----.

(ஆ) விவாகமானவரா/ விவாகமாகாதவரா/ விதவையா என்பது பற்றி :----.

8. கல்வித் தகைமைகள் :

| சித்தி பெற்றுள்ள பட்டம்/ பட்டப்பின் படிப்புத் தகைமை | வகுப்பு | பல்கலைக்கழகம் | பட்டம் பூர்த்தி செய்யப் பட்ட திகதி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

9. இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட இலக்கமும் திகதியும் :----.

10. சேவை விபரங்கள் (தற்போது நிரந்தரப் பதவி வகிப்பவராயின்) : ----.

| தற்போது வகிக்கும் பதவி | சேவைக்காலம் | | சேவையாற்றும் இடம் | திணைக்களம்/ மாகாண சபை |
|---|---|---|---|---|
| | இருந்து | வரை | | |
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

11. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் நான் அறிந்த அளவில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் கூறி இத்தால் உறுதிப்படுத்துகிறேன். என்னால் வெளியிடப்பட்ட தகவல்கள் பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்வதற்கு முன்னர் வெளிப்படுமாயின் நான் தகுதியற்றவர் எனவும், இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிந்துள்ளேன். நான் எந்தவொரு நீதிமன்றத்திலும் தண்டனைக்குரிய குற்றத்திற்கு ஆளாகவில்லையெனவும் இத்தால் எனது வழமையான கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளுக்கு மட்டும் ஏற்புடையது)

1. **திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ................................................ இத்திணைக்களத்தில் ............................. ...................... மாகாண சபையில் ...................................... பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் எனவும் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அவரின் தனி நபர் கோவையின் பிரகாரம் சரியானது என உறுதிப் படுத்துகிறேன். இவ் அலுவலர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை இத்திணைக்களத்திலிருந்து/மாகாண அரச சேவையிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை :----.
முகவரி :----.
திகதி :----.

5-557

---

**இலங்கை வான்படை**

அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்

இலங்கை தொண்டர் வான்படையில் ஆண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன :

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன :-

கல்வித் தகைமை, அனுபவம்.- குறைந்தபட்சம் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 திறமைச் சித்தி கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கை கல்வி அமைச்சின் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கல்வித் தகைமைக்கு அமைவாக சித்திபெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் எந்தத் துறையிலாவது மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கை கல்வி அமைச்சின் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கல்வித் தகைமைக்கு அமைவாக சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*அனுமதிப்பத்திரம்.-* இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துச் சேவையினால் அனுமதிக்கப்பட்ட தற்போது செல்லுபடியாகும் ATPL பல இயந்திர அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

பறக்கும் அனுபவம்.- குறைந்தபட்சம் 1,500 மணித்தியாலம் பறத்தல் அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் 500 மணித்தியாலம் பல இயந்திர பறத்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) குடியியல் நிலை.- விவாகமானவர்/விவாகமாகாதவர்;

(இ) வயது.- 2016, மே 31 ஆந் திகதிக்கு 18-35 வரை இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயரம்.- ஆண்கள் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் ;

(உ) நிறை.- 17 <உடற்பருமன் சுட்டி< 26

உடற்பருமன் சுட்டி (BMI) = $\frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$ ;

(ஊ) மார்பு.- ஆண் 32" (குறைந்தது) ;

(எ) பார்வை வர்ணப் பதிவு மட்டம் .- CP2 ;

(ஏ) தொலைப்பார்வை.- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) ;

(ஒ) வைத்திய பரிசோதனை.- (பொதுக் கடமை விமான ஓட்டுநர்) சிவில் விமான போக்குவரத்து சேவையினால் வழங்கப்பட்ட முதற்தர வைத்திய பரிசோதனையில் பெற்ற சான்றிதழ் இருத்தல் வேண்டும். இலங்கை வான்படையினால் நடத்தப்படும் வைத்திய பரிசோதனையில் விமான ஓட்டுநர்கள் சித்தி பெறவேண்டும்.

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லா திருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக் கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதி களுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் Pilot Officer/Flying Officer/Flight Lieutenant/Squadron Leader தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கை களுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக் காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு

ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஈ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| | |
|---|---|
| பைலட் ஒபீசர் | - ரூபா 2,42,700 |
| ப்ளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன்- | - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) தேவையைப் பொருத்து பந்தி 15(ஈ) உள்ள சேவைக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(இ) சேவைக் கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ஒவ்வொரு நாட்களுக்கும் 20 ரூபா வீதம் ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணி புரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு 1,000) ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255) ;

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 15,167.70 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் 505.59 வீதம்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) மேலதிகக் கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்தில் 20% ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது வசு வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு 1,600 ரூபாவிலிருந்து 4,250 ரூபா வரை) வாடகைப்படிகள் கொடுபடற் பாலனவாகும்.

(18) வரவு செலவுத் திட்டத்தின்படி ரூபா 10,000 மாதாந்தம்.

(19) தொலைபேசிக் கொடுப்பனவு மாதாந்தம் -

| | |
|---|---|
| விங் கமாண்டர் | - ரூபா 2,000 |
| குறூப் கப்ரன் | - ரூபா 4,000 |
| விசேட வைத்தியர் | - ரூபா 7,000 |
| வைத்தியர் | - ரூபா 4,000 |

16. ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2016, மே 23 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழிற்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல்

வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்ப காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணபத்தாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

(6) தற்போது செல்லுபடியாகும் ATPL பல இயந்திர அனுமதிப்பத்திர பிரதி (பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு).

(7) இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து சேவையினால் வழங்கப்பட்ட முதற்தர வைத்திய சான்றிதழ் பிரதி.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்ப தாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப் பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண் ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஜீ. பி. புலத்சிங்ஹல,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொண்டர் ஆண் நேரடி அரசாணை அமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

6. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

7. அஞ்சல் முகவரி :----.

8. E-Mail (மின்-அஞ்சல்) முகவரி :----.

9. பிறந்த திகதி :----.

10. உயரம் :----.

11. மாவட்டம் :----.

12. தேர்தற் தொகுதி :----.

13. கிராம அலுவலர் பிரிவு :----.

14. தொலைபேசி இலக்கம் :----.

15. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? : ----.

16. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தி யடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

17. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகிய திலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|---|
| தந்தை | | | | |
| தாய் | | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் : ----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பெறுபேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டவராயின் அல்லது பிணையில் விடப்பட்டவராயின் விபரங்கள் தருக :----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத் தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக் கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப் படுத்துகை.**- மேலே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் ஏற்றவகையில் சரியானவை என உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிகக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான் படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

5-680

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவ ராகவும், 40 வயதிற்குமேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்ல ஒழுக்கமுள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும், விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலஎல்லைக்கு நியமனம் செய்யப்படுவார். காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தர மாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியாக அவசியமாகும்.

காதி ஒருவருக்கு 6,000 ரூபா மாதாந்தக் கொடுப்பன வாகவும், மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற் கமைய, விண்ணப்பங்கள் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்னம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச் சேவை ஆணைக்குழு.

நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2016, மே 05.

### அட்டவணை

| | |
|---|---|
| 1. மாத்தறை | மாத்தறை நீதிப்பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக ரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண் ணப்பங்களைக் கோருகின்றது. |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதிப் பதவி**

காதிப் பிரிவு :

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம் ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிலையான வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி :

திகதி மாதம் வருடம்

6. வயது :

7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. ---------------------------------------------------
2. ---------------------------------------------------
3. ---------------------------------------------------
4. ---------------------------------------------------
5. ---------------------------------------------------

12. தொழில் தகைமைகள் :

1. ---------------------------------------------------
2. ---------------------------------------------------
3. ---------------------------------------------------
4. ---------------------------------------------------
5. ---------------------------------------------------

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

15. விவாகமானவரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் | இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி :

ரூ.

19. மாதாந்த வருமானம் :

ரூ.

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் :

ரூ.

21. சென்ற பத்து (10) வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

22. நீர் வருமானவரி செலுத்துமொருவரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உள்ளதா ? இருந்ததா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :

25. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை, இந்துசமயம் – 2015

**பரீட்சை நிபந்தனைகளும் பாடத்திட்டமும்.**- மேற்படி பரீட்சை 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் இலங்கை முழுவதும் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடைபெறும் நிலையங்கள்.**- விண்ணப்பதாரிகளின் தொகைக்கேற்ப நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

எனினும், குறிப்பிட்ட தொகையான விண்ணப்பதாரிகள் ஒரு பரீட்சை நிலையத்திற்கு விண்ணப்பிக்காத பட்சத்தில், அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அருகிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் தோற்றுமாறு விண்ணப்பதாரிகள் கோரப்படுவர். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள நகரங்கள் தொடர்பான விபரங்கள் இவ்வறிவித்தலின் இறுதியிலே சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.

3. **மொழிமூலமும் பாடத்திட்டமும் :**

3.1 இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்னிணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளது.

3.2 இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

4. **தகைமை.**- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் :-

4.1 இப்பரீட்சை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று, பதினோராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தியடையாதவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு.**- (அ) இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரி மேற்குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதனை இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றின் ஊடாக மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

5. கடந்த ஆண்டில் மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பி வைத்த எல்லா இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் போதுமான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப் படிவம் கிடைக்காத, அல்லது 2014 (2015) ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத இந்து அறநெறிப் பாடசாலை ஆயின் பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு 5.3 பிரிவிற் குறிப்பிட்ட முகவரிக்கு 2016.06.03 ஆந் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் :

5.1 விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2016.06.20 ஆந் திகதி ஆகும்.

5.2 விண்ணப்பப்படிவங்கள், தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்படல் வேண்டும். அங்ஙனம் நிரப்பப்படாத விண்ணப்பங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.3 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

5.4 விண்ணப்பங்களை இணைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை, இந்து சமயம் - 2015" எனவும் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.5 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பக் கூடாது. இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர், விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளாரென்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- முதற்தடவையாகத் தோற்றுபவர்கள், பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஏனையோருக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 150 ஆகும். நூன சித்தி பெற்ற பாடமொன்றிற்கு ரூபா 50 ஆகும் :

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய விண்ணப்பதாரிகள் (தமது அறநெறிப் பாடசாலை முதல்வரூடாக) நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் உரிய பணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்பவேண்டும். (முத்திரை/ காசுக்

கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியாது.) பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 அறநெறிப் பாடசாலை முதல்வர்கள் உரிய பரீட்சார்த்தி களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்டணத்தை மொத்தமாக அருகாமையிலுள்ள தபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

6.3 எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்தப் பட்ட கட்டணம், வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ, மீளப்பெறவோ இயலாததாகும்.

7. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர்கள்/பொறுப்பாளர்கள் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் சான்றுறுதி செய்யப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத போதோ அல்லது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும் போதோ அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை அதிபர் மூலம் குறித்த விண்ணப்பதாரிகளுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு தினங்களுக்கு முன் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர், இவ்விடயத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படல் வேண்டும் :

1. பரீட்சையின் பெயர் ;
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் ;
3. விண்ணப்பதாரியின் முழுப்பெயரும் விலாசமும் ;
4. விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;
5. விண்ணப்பங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்த தபால் நிலையம் ;
6. பதிவு இலக்கமும், திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- இந்து அறநெறிப் பாடசாலை ஒன்றின் மூலம் தோற்றும் மாணவர்கள், பரீட்சை நிலையத்தில் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குத் தயாராகச் சமுகமளித்தல் வேண்டும். இதற்கு கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

8.1 ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

8.2 செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு (Passport)

9. **சித்திபெற்றமையை தீர்மானித்தலும், பரீட்சை முடிவுகளை வெளியிடலும்**.- இப்பரீட்சைக்குரிய பாடங்கள் 4 ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்திபெறும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்திபெற்றோராகக் கருதப்படுவர். ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்திபெற்று ஒரு பாடத்தில் மற்றும் சித்திபெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்து வரும் இரண்டு வருட பரீட்சைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்திபெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றோராகக் கணிக்கப்படுவர்.

9.1 **பரீட்சை முடிவுகளை வெளியிடல்**.- விண்ணப்ப தாரிகளின் பரீட்சை முடிவுகள் பற்றிய விவ ரங்கள் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/ பொறுப்பாளருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- இப்பரீட்சையிற் சித்திபெறும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11. **பரிசு**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறுவோருக்கு பரிசுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

12. **விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்தல்**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள், இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளர் கோரியிருப்பின், விடைத்தாள்கள் மீள் பார்வையிடுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்படும். இதற்குரிய கட்டணத் தொகை அவ்வப்போது மாற்றம் பெறுவதால், குறித்த தொகை உரிய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இக்கட்டணம், பரீட்சை பெறுபேறுகளில் மீள் பரிசீலனையின்போது திருத்தம் இருப்பின் மட்டும் மீளச் செலுத்தப்படும். எக்காரணங்கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களைப் பார்ப்ப தற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

13. இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நடந்துகொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ள அதேவேளை, இங்கு

குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, மே 20.

*இணைப்பு 1*

குறித்த மாவட்டங்களிலே பரீட்சை மண்டபங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும் :

**கொழும்பு மாவட்டம் - 01**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மருதானை | 0101 |
| கொட்டாஞ்சேனை | 0102 |
| பம்பலப்பிட்டி | 0103 |
| நுகேகொடை | 0104 |
| அவிசாவளை | 0105 |
| ஹோமாகம | 0106 |

**கம்பஹா மாவட்டம் - 02**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

**களுத்துறை மாவட்டம் - 03**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| களுத்துறை | 0301 |
| மத்துகம | 0302 |
| பாணந்துறை | 0303 |
| அழுத்கம | 0304 |

**காலி மாவட்டம் - 04**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| காலி | 0401 |

**மாத்தறை மாவட்டம் - 05**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தறை | 0501 |
| தெனியாய | 0502 |

**அம்பாந்தோட்டை மாவட்டம் - 06**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாந்தோட்டை | 0601 |

**இரத்தினபுரி மாவட்டம் - 07**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| இரத்தினபுரி | 0701 |
| கஹவத்தை | 0702 |
| பலாங்கொடை | 0703 |
| இறக்குவானை | 0704 |

**கேகாலை மாவட்டம் - 08**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கேகாலை | 0801 |
| எட்டியந்தோட்டை | 0802 |
| வரக்காப்பொல | 0803 |

**குருநாகல் மாவட்டம் - 09**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| குருநாகல் | 0901 |

**புத்தளம் மாவட்டம் - 10**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| புத்தளம் | 1001 |
| சிலாபம் | 1002 |
| உடப்பு | 1003 |

**அநுராதபுரம் மாவட்டம் - 11**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அநுராதபுரம் | 1101 |

**பொலநறுவை மாவட்டம் - 12**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பொலநறுவை | 1201 |
| மன்னம்பிட்டிய | 1202 |

**மாத்தளை மாவட்டம் - 13**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தளை | 1301 |
| இரத்தோட்டை | 1302 |

**கண்டி மாவட்டம் - 14**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கண்டி | 1401 |
| புசல்லாவ | 1402 |
| கலஹா | 1403 |
| கம்பளை | 1404 |
| நாவலப்பிட்டி | 1405 |

**நுவரெலியா மாவட்டம் - 15**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நுவரெலியா | 1501 |
| ஹற்றன் | 1502 |
| பூண்டுலோயா | 1503 |
| தலவாக்கலை | 1504 |
| மஸ்கெலியா | 1505 |

**பதுளை மாவட்டம் - 16**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பதுளை | 1601 |
| வெலிமடை | 1602 |
| பண்டாரவளை | 1603 |
| ஹப்புத்தளை | 1604 |
| பசறை | 1605 |

**மொனராகலை மாவட்டம் - 17**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மொனராகலை | 1701 |

**அம்பாறை மாவட்டம் - 18**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 1801 |
| அக்கரைப்பற்று | 1802 |
| கல்முனை | 1803 |
| திருக்கோவில் | 1804 |
| பொத்துவில் | 1805 |
| சம்மாந்துறை | 1806 |

**மட்டக்களப்பு மாவட்டம் - 19**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 1901 |
| களுவாஞ்சிக்குடி | 1902 |
| வாழைச்சேனை | 1903 |
| செங்கலடி | 1904 |

**திருகோணமலை மாவட்டம் - 20**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 2001 |
| மூதூர் | 2002 |

**வவுனியா மாவட்டம் - 21**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 2101 |
| ஓமந்தை | 2102 |
| செட்டிக்குளம் | 2103 |

**மன்னார் மாவட்டம் - 22**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 2201 |

**முல்லைத்தீவு மாவட்டம் - 23**

| நகரம் | நகர எண் |
|---|---|
| முல்லைத்தீவு | 2301 |
| புதுக்குடியிருப்பு | 2302 |
| ஒட்டுசுட்டான் | 2303 |

**கிளிநொச்சி மாவட்டம் - 24**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2401 |
| ஸ்கந்தபுரம் | 2402 |
| பூநகரி | 2403 |
| முழங்காவில் | 2404 |
| பளை | 2405 |

**யாழ்ப்பாண மாவட்டம் - 25**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2501 |
| சாவகச்சேரி | 2502 |
| பருத்தித்துறை | 2503 |
| வேலணை | 2504 |
| நெடுந்தீவு | 2505 |

*இணைப்பு 02*

**அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - இந்து சமய பாடத்திட்டம்**

1. சமய வரலாறு
2. சமய மெய்யியல்
3. சமய இலக்கியம்
4. சமய வாழ்வியல்

**1. சமய வரலாறு**

1. இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு

   1.1 சிந்துவெளி நாகரீகம்
   1.2 சனாதன தர்மம்
   1.3 வேதகாலம்

      1.3.1 வேதகால தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும்

   1.4 இதிகாசங்கள்

      1.4.1 வகை
      1.4.2 தோன்றக் காரணம்
      1.4.3 பகவத் கீதை

   1.5 புராணங்கள்

      1.5.1 பதினென் புராணவகை – தோன்றக் காரணம்

   1.6 தரும சாத்திரங்கள்

2. சைவசமய வரலாறு

   2.1 சைவ சமயத்தின் தொன்மை
   2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
   2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3. தமிழகத்துச் சைவசமய வரலாறு

   3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
   3.2 பக்திநெறி

      3.2.1 காரைக்காலம்மையார்
      3.2.2 சமய குரவர் நால்வர்
      3.2.3 ஆலயங்களும், வழிபாடும்

   3.3 சாத்திரங்களும் கோத்திரங்களும்

      3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
      3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தத் தொகுப்பு
      3.3.3 சந்தான குரவர் நால்வர்
      3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
      3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்

   3.4 சைவ நிறுவனங்கள் : மடங்களும் ஆதீனங்களும்
   3.5 ஞானியர் வரலாறு : திருமூலர்

4. இலங்கையில் சைவம்

   4.1 தொன்மை
   4.2 புராதன ஆலயங்கள்
   (சிறப்பாக) திருக்கேதீச்சரம்
   திருக்கோணேச்சரம்
   முன்னேச்சரம்
   நகுலேச்சரம்
   கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
   4.3 பிரதேச ஆலய வரலாறு
   (மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5. இலங்கையில் சைவ மறுமலர்ச்சி

   5.1 பெரியார்கள்
      5.1.1 ஆறுமுகநாவலர்
      5.1.2 விபுலானந்தர்
   5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
   5.3 ஞானியர்

**2. சமய மெய்யியல்**

1. வேதங்கள்

   1.1 பல தெய்வக் கோட்பாடு
   1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
   1.3 வேதப் பிரிவுகள்

2. உபநிடதங்கள்

   2.1 மகாவாக்கியங்கள்
   2.2 அறக்கோட்பாடு

3. பகவத்கீதை

   3.1 நால்வகை யோகம்

4. மூவகை வேதாந்தங்கள்

   4.1 அத்துவைதம்
   4.2 விசிட்டாத்வைதம்
   4.3 துவைதம்
   (இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5. சைவ சித்தாந்தம்

   5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
   5.2 சற்கரிய வாதம்
   5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
   5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
   5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
   5.6 சிவசின்னங்கள்
   5.7 தீட்சை

6. திருவருட்பயன் - 10 அதிகாரம்

3. **சமய இலக்கியம்**

1. திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசம்பந்தர் தேவாரம்
(அ) "வேயுறு தோளி பங்கன்..............."
(பதிகம் முழுவதும்)

1.2 அப்பர் தேவாரம்
(அ) "மாதர் பிறை கண்ணியானை ......."
(பதிகம் முழுவதும்)

1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
"நத்தார் படை ............................"
(பதிகம் முழுவதும்)

1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்

1.5 திருவிசைப்பா
(அ) "அற்புதத் தெய்வம் ...................."
(ஆ) "கற்றவர் விழுங்கும் ...................."

1.6 திருப்பல்லாண்டு
(அ) "சீரும் திருவம் பொலிய ................"
(ஆ) "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் .........................................................."
(இ) "மிண்டு மனத்தவர் ................"

1.7 திருப்புராணம்
(அ) "ஐந்து பேரறிவும் .........................."
(ஆ) "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன் .........................................."
(இ) "அண்ணலார் தமக்கீடு ................."

1.8 திருமந்திரம்
(அ) "அன்பும் சிவமும் ..............................................."
(ஆ) "உள்ளம் பெருங்கோயில் ..............................................."
(இ) "யாவர்க்குமாம் ..............................................."

1.9 இரண்டாம் திருமுறை
மூத்தநாயனார் திருவிரட்டை மணி மாலை — கபிலதேவநாயனார்
"திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் செங்சொற் ......................................"
காரைக்காலம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி
"கண்ணாரைக் கண்டும் என் கையாரக் கூப்பியும் ........................"

2. ஏனைய தோத்திரப் பாடல்கள்

2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்
(அ) "எதிரிலாத பக்தி ..............................................."
(ஆ) "பக்தியால் யாலுனை ..............................................."

2.2 அபிராமி அந்தாதி — அபிராமிப்பட்டர்
(அ) "நின்றும் இருந்தும் கிடந்தும் ..............................................."
(ஆ) "சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி ....................."
(இ) "கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் ........................"

2.3 பராபரக்கண்ணி — தாயுமானவர்
(அ) "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க ...................."
(ஆ) "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு"
(இ) "விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும் .........................................."
(ஈ) "சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் ..............................................."
(உ) "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே ....................."

3. திவ்விய பிரபந்தங்கள்
திருப்பாவை :— ஆண்டாள்

(அ) "மாரிமழை முழைஞ்சல் முன்னிக் கிடத்துறங்கும்............"
(ஆ) அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி .........................................................."
(இ) "மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் ....................................."

4. கந்தபுராணம்
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவுசெய்யப்பட்டவை) — பாடல் ஒன்று முதல் இருபது வரை

5. பெரிய புராணம்
கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6. திருவிளையாடற் புராணம் -
பரம்சோதி முனிவர்

(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7. நீதிப்பாடல்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்

(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்
(ஆ) இல் வாழ்க்கை — 5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை — 13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை — 14 ஆம் அதிகாரம்
(உ) நட்பு - 79 ஆம் அதிகாரம்

4. **சமய வாழ்வியல்**

1. ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்

1.1 திருக்கோயில் அமைப்பு
1.2 திருக்கோயில் வழிபாடு
1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2. வீட்டில் வழிபாடு

2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)

2.2 விசேட வழிபாடு

(அ) கூட்டு வழிபாடு
(ஆ) தியானம்
(இ) செபம்

2.3 அகப்புறத் தூய்மை

3. விரதங்களும் பண்டிகைகளும்
3.1 விரதங்கள்

(அ) சிவராத்திரி
நவராத்திரி
விநாயகர் சதுர்த்தி
கந்தசஷ்டி
விநாயகர் சஷ்டி
திருவாதிரை
பிரதோஷம்
வைகுண்ட ஏகாதசி

(ஆ) அமாவாசை,
பூரணை விரதங்கள்

3.2 பண்டிகைகள்

3.2.1 தைப்பொங்கல்
3.2.2 சித்திரை வருடப் பிறப்பு
3.2.3 ஆடிப்பிறப்பு
3.2.4 தீபாவளி
3.2.5 கார்த்திகை விளக்கு

4. அபரக் கிரியைகள்

4.1 பொது விளக்கீடு
4.2 மரணக் கிரியைகள்
4.3 சபிண்டீகரணம்
4.4 சிரார்த்தம்

5. சமய, ஆன்மீக விழுமியங்கள்

5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்து கொள்ளல்.

6. சமய வாழ்வுடன் கலைகள்-

இசை
நடனம்
கட்டடம்
சாத்துப்படி
மாலை கட்டுதல்
பண்ணிசை
சிற்பம்
ஓவியம்
சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
கோலம் போடுதல்

5-512

---

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளி விபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016(2015)

## First Efficiency Bar Examination for Senior Statisticians and Statisticians of the Department of Census and Statistics - 2016(2015)

சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்கள் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறை ஏற்பாடுகளின் பிரகாரம் முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2016, ஒகத்து மாதத்தில் நடத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் தனியாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

*3.* ***பரீட்சைக் கட்டணம்.-*** பரீட்சைக்குரிய பாடங்களில் ஒரே தடவையாகவோ வெவ்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும். இவ்வினைத்திறமை தடைகாண் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 250 உம், மொத்தப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 1,000 பரீட்சைக் கட்டணமாகவும் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/ உப தபால் நிலையத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

*4.* ***விண்ணப்பப்படிவம்.-*** விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளில் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 5 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்கள தலைவரின் ஊடாக 2016, யூன் 20 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியும் இணைத்து அனுப்புதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. ***பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.-*** பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பரீட்சையின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தைச் சான்றுபடுத்தி அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினூடாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2, 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் இணைத்து அத்துடன் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் விண்ணப்பக் கடிதத்தை நீங்கள் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் மிகவும் பொருத்தமானதாகும்.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடன் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் அனுமதி அட்டையிலுள்ள தமது பெயரை நிறுவனத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். உரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றவேண்டியதுடன் அவ்வாறு தோற்றும் முதல் நாளிலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

8. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும்

மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்.**- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | பாட இல. | புள்ளி கள் | காலம் |
|---|---|---|---|
| 1. நிர்வாகம் | 1 | 100 | 2 மணித்தியாலம் |
| 2. அரச துறை நிதி முகாமைத்துவம் | 2 | 100 | 2 மணித்தியாலம் |
| 3. ஆங்கிலம் | 3 | 100 | 2 மணித்தியாலம் |
| 4. பிரயோகப் புள்ளி விபரங்கள் | 4 | 100 | 3 மணித்தியாலம் |

(1) நிர்வாகம்-பாட இல. 1 :

* அலுவலக மற்றும் கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், ஒழுங்கமைப்பு முறை
* தாபன விதிக்கோவையின் கீழ் காட்டப்படும் அத்தியாயங்கள் I, II, III, V, VI, VII, IX, XI, XII, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII (மேற்படி அதிகாரங்கள், அரச சேவை ஆணைக்குழு மற்றும் அலுவலக நடைமுறைக் கோவையின் 1 ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு கவனஞ் செலுத்தவும்.)

(2) அரச துறை நிதி முகாமைத்துவம் - பாட இல. 2.- நிதி ஒழுங்குவிதிகள் கீழ்க்காட்டப்பட்ட அதிகாரங்கள் :

(i) சகல பிரிவுகளும்
(ii) சகல பிரிவுகளும்
(iii) சகல பிரிவுகளும்
(iv) சகல பிரிவுகளும்
(v) 1, 2, 3, 4 ஆம் பிரிவுகள்
(vi) சகல பிரிவுகளும்
(vii) 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

(3) ஆங்கிலம் - பாட இல. 3

English Grammer :

A suitable level of proficiency on the following forms of grammar in the spoken the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple/Compound/ Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

Writing Skills :

The Knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Internal modes of Communication
- Formal Correspondences skills
- Writing Descriptions/Explanations
- Summary Writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/ Invitations
- Comprehension

Reading Skills :

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected.

- Reading and understanding the specific and general meaning of the printed text.
- Reading and interpretation (Verbal/ Written)
- Understanding the Cohesion and coherence of a passage

(4) பிரயோகப் புள்ளிவிபரங்கள் - (பாட இல. 4).- தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் கைத்தொழில், விவசாயப் புள்ளிவிபரங்கள், தேசிய கணக்குகள், தகவற் தொழில்நுட்பம் (தரவு வகைப்படுத்தல்), மாதிரி அளவீடுகள், குடிசனத் தொகைமதிப்புக்கள், விலைச்

சுட்டெண்கள், வரைபடங்கள் போன்ற பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் புள்ளிவிபர வேலைகள் சம்பந்தமாக இயைபுடைய உத்தியோகத்தர்களின் அறிவை மதிப்பிடும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும்.

10.1 சித்தி எய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் அல்லது அதற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் எடுத்திருத்தல் வேண்டும் என்பதுடன் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி எய்துவதற்கு சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்பட முடியாது.

11.1 பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கலாக பெறுபேறுகளின் படிவத்தை பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே அதிகாரபூர்வமானது.

பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
'சங்கியான மந்திரய',
இல. 306/71, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016(2015)**

First Efficiency Bar Examination for Senior Statisticians and Statisticians of the Department of Census and Statistics - 2016 (2015)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை பெட்டியில் எழுதவும்)

1. முதல் எழுத்துக்களை இறுதியில் இட்டு விண்ணப்பதாரியின் முதல் எழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) உதாரணம் : SUNIL, J.M.U :----.

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----. (உதாரணம்- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் : ----.
(உதாரணம்- GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. அலுவலகத்தின் பெயரும் முகவரியும் :

2.1 அலுவலகத்தின் பெயர் : ----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3. 3.1 ஆண், பெண் பிரிவு :

ஆண்-0
பெண்-1
(உரிய இலக்கத்தைப் பெட்டியில் இடவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

4. நீங்கள் தோற்றவுள்ள தடைகாண் பரீட்சைக்குரிய பாடம்/ பாடங்கள் :
(வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியைப் பார்க்க)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5. தற்போது வகிக்கும் பதவி :----.

5.1 நியமனக் கடித இலக்கம் :----.

5.2 நியமனத் திகதி :----.

6. நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? : ----.

6.1 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

6.2 பற்றுச்சீட்டு இல. :----.

6.3 திகதி :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்) (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு.**- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

### கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

திரு./திருமதி/செல்வி ............................................... எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................ .................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)

### திணைக்களத் தலைவரின் உறுதியுரை

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரி பார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

5-517

## காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

### நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை கள உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ Level 2/3/4) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2016/ 2017

நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை கள உதவியாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 2/3/4 (NVQ level 2/3/4) பாடநெறிக்காகக் கீழ்க்காணும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களுள் அவர்களது தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய இப்பாட நெறிக்குத் தேவையான அளவுக்கேற்ப மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. இப்பாடநெறியைப் பயில்வதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் தினமன்று கீழ்க்காணும் சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் :-

(i) நற்பண்புகள் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;
(ii) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(iii) 18 வருடங்களுக்கும் 45 வருடத்திற்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும் ;
(iv) இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பபடிவத்திற்கு அமைவாக 11.7" x 8.3" (A4) அளவிலான தாளில் உரிய விண்ணப்பப்படிவத்தினைத் தாமாகவே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அவர்கள் சகல விண்ணப்பப்படிவத்திலும் இலக்கம் 12 இன்கீழ் காணப்படும் உறுதியுரையைத் தமது வழமையான கையொப்பத்தையிட்டு சான்றுப்படுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணமாக 250 ரூபாவை நிலஅளவைத் திணைக்கள மாகாண/ மாவட்ட அலுவலகத்தில் அல்லது நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2016.06.10 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கதாக கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் :

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சைகள்),
பரீட்சைகள் கிளை,
நில அளவையாளர் நாயக அலுவலகம்,
த.பெ. இல. 506, கொழும்பு 05.

4. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறியின் பெயர் "(NVQ Level 2/3/4)" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

5. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. (அ) இப்பாடநெறி 3 மாத கால முழுநேர பாடநெறியாகும். கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தியதலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் 1/2 மாத (இரண்டு வார) முழுநேர வதிவிடப் பாடநெறியுடனும், களத்தில் 2 1/2 மாத (10 வார) தொழில்சார் நடைமுறைப் பயிற்சிப் பாடநெறியுடனும் (Industrial Training) கூடியதாக இரண்டு கட்டங்கள் கொண்டதாக அமையும். தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் உபயோகிக்கப்படும் மின்சார, நீர் மற்றும் வதிவிடக் கட்டணமாக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 5,000 அறவிடப்படுவதுடன் பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பாடநெறி ஆரம்பத் திகதியன்று அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் இக்கட்டணத்தை செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| பகுதி | காலம் | நடைபெறும் இடம் | வதிவிடம் | உணவு/ பானம் |
|---|---|---|---|---|
| 1 | 2 வாரம் | அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை (முழுநேர வதிவிடப் பாடநெறி) | வதிவிட வசதி வழங்கப் படும் | வழங்கப்பட மாட்டாது (போசன சாலை வசதி யுண்டு) |
| 2 | 10 வாரம் | வெளிக்களத் தில் அமைந் துள்ள பிரதேச நிலஅளவை அலுவலகம் சார்ந்த நடைமுறைப் பயிற்சி | வழங்கப் பட மாட்டாது | வழங்கப் பட மாட்டாது |

(ஆ) பாடநெறி சிங்களம்/தமிழ் மொழிகளில் நடாத்தப்படும்.

(இ) இப்பாடநெறிக்குத் தகுதியானவர்கள் பொது அறிவு மற்றும் நுண்ணறிவு உள்ளடங்கிய இரண்டு வினாத்தாள்கள் கொண்ட போட்டிப் பரீட்சையொன்றில் 60% இற்கு மேல் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளைக் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் மூலமும் மேற்குறித்த பரீட்சையிலும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்ற புள்ளிகளின் மொத்த தொகைக்கமைய திறமை அடிப்படையிலான வரிசைக்கிரமப்படி தெரிவுசெய்யப்படுவார்கள். இப்போட்டிப் பரீட்சை சிங்கள/தமிழ் மொழி மூலம் மாகாண மட்டத்தில் நடத்தப்படுவதுடன் தாம் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள பரீட்சை நிலையம் மற்றும் மொழி மூலத்தினையும் விண்ணப்பப்படிவத்தின் முதல் பக்கத்தில் வலதுபக்க மேல் மூலையிலுள்ள கூடுகளில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) போட்டிப் பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்கள் கீழே காணப்படுகின்றன :

| | மாகாணம் | பரீட்சை நிலையம் |
|---|---|---|
| 1 | மேல் மாகாணம் | கொழும்பு |
| 2 | மத்திய மாகாணம் | கண்டி |
| 3 | தென் மாகாணம் | மாத்தறை |
| 4 | வட மாகாணம் | யாழ்ப்பாணம் |
| 5 | கிழக்கு மாகாணம் | திருகோணமலை |
| 6 | வடமேல் மாகாணம் | குருநாகல் |
| 7 | வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் |
| 8 | ஊவா மாகாணம் | தியத்தலாவை |
| 9 | சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி |

(உ) போட்டிப் பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளின் பரீட்சை அனுமதி அட்டைகள் பதிவுத்தபாலில் முன்கூட்டியே அனுப்பி வைக்கப்படும்.

(ஊ) போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் நிலஅளவைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www. survey.gov.lk) பரீட்சை நடாத்தப்பட்டு ஒரு மாதத்திற்குள் வெளியிடப்படும்.

(எ) பாடநெறி பயிலும் காலத்துள் நிலஅளவை திணைக் களத்தால் பயிற்சி பெறுவோருக்கு எதுவித கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

7. பயிற்சிக்காலம் முடிவடைந்த பின் மாணவர்கள் பெற்ற பயிற்சி மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் நியமிக்கப்பட்ட அலுவலர்களால் பரீட்சிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வெழுத்து மூல/செயல்முறைப் பரீட்சைகளில் சித்தியடைவோர்களுக்கு மட்டும் அவர்களது அறிவு மட்டத்திற்குரிய தேசிய தொழில் தகைமை மட்டம் (NVQ Level) குறிப்பிடப்படும் சான்றிதழ் நிலஅளவைத் திணைக்களம், மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு இரண்டாலும் இணைந்து வழங்கப்பட ஆவண செய்யப்பட்டுள்ளது.

8. ஆவணங்களினதும், சான்றிதழ்களினதும் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தமது தகைமைகளை நிரூபிப்பதற்குத் தேவையானதும் ஏற்கக்கூடியதுமான ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின்போது வழங்கத்தவறும் விண்ணப்ப தாரிகள் தகைமையற்றவராகக் கருதப்படுவர்.

9. சகல ஆவணங்களினதும் நம்பகத்தன்மைக்கு விண்ணப்ப தாரியே முழுப் பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மையை உறுதி செய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு

எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இது ஒரு தனியான பயிற்சிப் பாடநெறியாய் அமைவதுடன் பயிற்சி முடிவடைந்தபின் தொழில் வழங்கப்படுவதற்கான எதுவித கடப்பாடும் இல்லை என்பதையும் பாடநெறியை வெற்றிகரமாய் பூர்த்திசெய்து NVQ தகைமை பெற்றுக்கொள்வோருக்கு எதிர்காலத்தில் நிலஅளவைக் கள உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைக்குத் தோற்றத் தேவையான தொழில் தகைமை இதனால் பூரணமாவதால் உரிய பதவிக்கு விண்ணப்பங்கள் செய்ய அவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

11. இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 2016/ 2017 ஆம் ஆண்டில் நடத்தப்படுவதற்குரிய இப்பாடநெறியை நடாத்துதல் ஒரு பாடநெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர் தொகை அல்லது வருடத்தினுள் நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகளின் தொகை போன்றவை குறித்த தீர்மானங்கள் நில அளவையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

பி. எம். பி. உதயகாந்த,
நில அளவையாளர் நாயகம்.

2016, மே 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை கள உதவியாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ level 2/3/4) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2016/ 2017 ஆம் கல்வியாண்டு**

பரீட்சை நிலையம் : [ ]

மொழி மூலம் (சிங்களம்/ தமிழ்) : [ ]

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

3. நிரந்தர முகவரி :----.

4. தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் :

நிலையான :----. கையடக்கம் :----.

மின்னஞ்சல் :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

6. மாவட்டம் :----. தேர்தற் தொகுதி :----.
பிரதேச செயலாளர் பிரிவு :----. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

7. பிறந்த திகதி (2016.06.10 ஆந் திகதியன்று வயது) :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

8. பால் (ஆண்/ பெண்) :----.

9. கல்வித் தகைமைகள் :
(அ) க. பொ. த. ப. (சா.த.) பெறுபேறுகள் (இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில்) :

| | பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ) க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றி இருப்பின் அதன் பெறுபேறுகள்

| | பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|---|
| | | | | |

10. இதற்கு முதலில் NVQ பாடநெறியினைப் பயின்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.
பாடநெறியின் இலக்கம்/குறியீடு :----.
NVQ தகைமை மட்டம் :----.
நிறுவனம் :----.

11. பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (ரூ. 250) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இங்கு ஒட்டவும்.

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்பபடிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு உட்பட்டவரையில் உண்மையானவை எனவும், விண்ணப்பித்துள்ள பாடநெறிக்குத் தேவையான தகைமைகள் எனக்குண்டு என்றும் இத்தால் உறுதி செய்கின்றேன். மேலும் இப்பாடநெறி தொடர்பான அனைத்து சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு நடப்பேன் என்றும் நில அளவையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-819

**இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்ளல்**

இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உப புகையிரத நிலைய அதிபர் பதவிகளுக்காக வெற்றிடம் நிலவும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள உப புகையிரத நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது :-

1. தெல்வத்த
2. ஹிரியால
3. யத்தல்கொட
4. பயாகல வடக்கு
5. ரன்தெணிகம
6. கடுகொட
7. மாதம்பாகம
8. அக்குறல
9. பொல்வத்துமோதர
10. கும்பல்கம
11. குமாரகந்த
12. திரானகம
13. அருக்வத்த
14. அங்கம்பிட்டிய
15. கொடகம
16. கம்மான
17. ஹோமாகம வைத்தியசாலை வீதி
18. எருக்கலம்பிட்டி நாகவில்லு
19. மொரகெலே
20. தெமட்டகொட
21. உக்கல்ல
22. உடஹமுல்ல
23. பெங்கிரிவத்த
24. யாகொட
25. புலுகஹகொட
26. துடெல்ல

27. லியனகேமுல்ல
28. செயலக தரிப்பிடம்
29. பேரலந்த
30. மிஹிந்தலே சந்தி
31. சாலியபுர
32. அவுக்கன
33. மின்னேரிய
34. ஹபரன
35. ஹதரஸ்கொட்டுவ
36. ஹொரிவில
37. கல்லேல்ல
38. எழுதுமட்டுவாள்
39. ரிதிதென்ன
40. யட்டகம
41. கங்கொட
42. கினிகம
43. திஸ்மல்பொல

1. **உப புகையிரத நிலைய அதிபர்களின் கடமை விபரம்**.- பயணச்சீட்டு விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் பிரதிநிதிகள் அந்தந்த நிலையங்களில் நிறுத்தப்படும் புகையிரதங்களின்படி 24 மணி நேரமும் பயணச்சீட்டு விற்பனை செய்தல் வேண்டும். பார்சல் கையேற்றல், கிடைக்கும் பார்சல்களை உரியவர்களிடம் ஒப்படைத்தல், தினமும் ஒன்றுசேரும் பணத்தை பிரதம புகையிரத கணக்கு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைத்தல், நிலையத்தை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் புகையிரத முகாமையாளரினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளும் இப்பிரதிநிதிகளின் பொதுவான கடமையாகும்.

2. **கொடுப்பனவு**.- நிரந்தர சேவையாளர் தொகைக்கு உட்படாத பதவியாகும். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு அந்தந்த நிலையத்தின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தரகுப்பணமும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்படும். மேலும் ஆரம்ப தரகுப் பணம் 310 ரூபா ஆவதுடன் (குறைந்த தரகுப் பணம் 310 ரூபாவின்படி தரகுப் பணத்தைக் கணக்கிடும்போது கிடைக்கும் முழுத் தரகுப் பணம் 10,000 ரூபாவுக்கு குறைவாயின் 10,000 ரூபாவான தரகுப் பணம் கிடைக்கும்) தரகுப் பணத்திற்கு மேலதிகமாக 5,329 ரூபாவான கொடுப்பனவும் வழங்கப்படும்.

3. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தில் ஒரு நிலையத்தை மாத்திரம் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டியதுடன் ஒன்றுக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள நிலையத்திற்கு விண்ணப்பித்துள்ளதாகக் கருதப்படும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

5. **கல்வித் தராதரம்**.- க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலத்துடன் கணிதம் உட்பட சிறப்பு சித்தி நான்குடன் ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரி குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து 20 கி. மீ. தூரத்திற்குள் (நேரடி தூரம்) குறைந்தது 5 வருட காலம் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். நியமனக் கடிதம் கிடைப்பதற்கு முன்பு இதுபற்றி உறுதிப்படுத்தும் பொருட்டு நம்பத்தகுந்த கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (கிராம அலுவலர் சான்றிதழ், பிரதேச செயலாளரின் சான்றிதழ், தேர்தல் இடாப்பு பிரதி போன்றவையாகும்.) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் முகவரி நிரந்தர முகவரியாக இருக்க வேண்டியதுடன் புகையிரத நிலையத்திற்குள்ள நேரடி தூரத்தை கணக்கிட வேண்டியது அம்முகவரியில் இருந்தாகும்.

(ii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாததாகவும் மார்பளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) உப புகையிரத நிலைய அதிபராக தற்போது கடமை புரிபவர்களுக்கும் அல்லது அவ்வாறு சேவை செய்து சேவை முடிவுறுத்தப்பட்டவர்களுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியாது.

(v) விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த கண் பார்வையும் உடையவர் என வைத்திய பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்பே தேர்ந்தெடுக்கப்படுவர். சிறந்த கண் பார்வை உடையவராக இருப்பது கட்டாயமாகும்.

7. **தேர்ந்தெடுக்கப்படும் முறை**.- புகையிரத முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். போட்டிப் பரீட்சையின்போது சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களின்கீழ் இரு வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். பரீட்சையில் தகுதிபெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40 வீத புள்ளிகளைப் பெறல் வேண்டும் :-

(i) *மொழித்தேர்ச்சி*.- (காலம் : 1 மணித்தியாலம்) - மொத்தப்புள்ளி 100 ஆகும். விளங்கிக் கொள்ளுதலுடன், சரியான மொழி நடையை பிரயோகித்தல் சம்பந்தமாக விடயத்துடன் தொடர்புடைய கேள்விகளை உள்ளடக்கிய கேள்வித்தாளாகும்.

(ii) *நுண்ணறிவு.- (காலம் : 1 மணித்தியாலம்) - மொத்தப்புள்ளி 100 ஆகும். கேள்வித்தாளிலேயே விடை எழுதவேண்டிய கணித குளறுபாடு, மொழித் தொகுதி, அட்டவணை, பொருந்திப் பார்த்தல் குறிப்பு, படம், வரைபு போன்றவற்றின் உதவியுடன் தர்க்க ரீதியாக சரியான உடனடி தீர்மானம் எடுக்கும் சிறந்த ஆற்றலை பரிசீலனை செய்யும் பல்தெரிவிலான கேள்வித் தாளாகும்.*

**குறிப்பு**.- (i) போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்றவர்கள் மத்தியில் அந்தந்த பயணச்சீட்டு விற்பனை நிலையத்தின்படி கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரி குறிப்பிட்ட பயணச்சீட்டு விற்பனை நிலையத்திற்கு நியமிப்பதற்காக தகுதிகளை ஆராயும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

(ii) நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தகுதிபெற்றவர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் புகையிரத பயணச்சீட்டு விற்பனை முகவரிடம் அல்லது உப புகையிரத நிலைய அதிபரின்கீழ் அனுமதிக்கப்பட்ட பதிலீட்டாளராக சேவை செய்துள்ள விண்ணப்பதாரிக்கு முதலிடம் வழங்கப்படும். அவ்வாறில்லாவிடின் குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து மிகவும் கிட்டிய தூரத்தில் வசிப்பவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

8. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை :**

(அ) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கும்படி அல்லது குறைந்தது ரூபா 25,000 ஆன தொகை பாதுகாப்பு பிணைப்பணமாக புகையிரத முகாமையாளரின் பெயருக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டியதுடன் புகையிரத முகாமையாளருடன் கையொப்பமிடும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படியும் கடமை மேற்கொள்ளல் வேண்டும். அவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறுதல் சேவையை முடிவுறுத்துவதற்கு காரணமாக அமையும்.

(ஆ) இது ஒப்பந்த அடிப்படையிலாவதுடன் வருடத்திற்கு வருடம் இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்படாதவிடத்து ஒப்பந்தம் முடிவுபெறும்.

(இ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தான் நியமிக்கப்படவுள்ள நிலையத்தின் கடமைகள் பற்றி தெரிந்துகொள்வதற்காக புகையிரத முகாமையாளரினால் கூறப்படும் புகையிரத நிலையத்தில் 14 நாட்கள் பயிற்சியைப் பெறல் வேண்டும். இப்பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(ஈ) தனக்குப் பதிலாக உதவிக்காக வேலை செய்வதற்கு புகையிரத திணைக்களத்தின் அனுமதியுடன் உதவியாளர் ஒருவரை அனுமதித்துக்கொள்ள முடிவதுடன் உதவியாளருக்காக எவ்வித கொடுப்பனவும் திணைக்களத்தினால் வழங்கப்பட மாட்டாது. நிலையத்தின் முழுப்பொறுப்பும் உப புகையிரத நிலைய அதிபரையே சாரும்.

(உ) பயிற்சியைப் பெறும் காலவெல்லைக்குள் அல்லது உப புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றும் காலவெல்லைக்குள் அல்லது நேர்முகப் பரீட்சையின்போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப் பத்தில் விண்ணப்பதாரியினால்/அவருக்காக தரப்பட்டுள்ள/வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானதெனவும் அங்கீகாரம் அற்றதெனவும் தெரியவருமிடத்து எவ் அறிவித்தலுமின்றியும் நஷ்டஈடுகள் எதுவுமின்றியும் உடனடியாக அவரின் சேவை முடிவுறுத்தப்படும்.

(ஊ) உப புகையிரத நிலைய அதிபராக தேர்ந்தெடுக்கப் படுபவர் அத்தேர்ந்தெடுப்பு மூலம் புகையிரத திணைக்களத்தில் எந்த நிரந்தர பதவியையும் வழங்குவதற்கு திணைக்களம் பொறுப்புடையதல்ல.

9. **சேவை நிபந்தனை**.- (i) கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் ஏதேனும் நிபந்தனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அவரின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

(ii) புகையிரத முகாமையாளரினால் காலத்திற்கு காலம் இடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்படிவதற்கு இணங்குதல் வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- சகல விண்ணப்பதாரிகளும் மீண்டும் வழங்கப்படாத ரூபா 500 ஆன தொகை பரீட்சைக் கட்டணமாக புகையிரத பொது முகாமையாளர் எனும் பெயருக்கு மாற்றப்படும் அலுவலகம், மருதானை தபால் நிலையம் எனக் குறிப்பிட்டு பெறப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வேறு விதங்களில் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். பூரணமற்றதும், முறையற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

11. **விண்ணப்பப்படிவம் அனுப்புதல்**.- தட்டச்சு கடதாசி அளவுள்ள (ஏ-4) கடதாசியில் விண்ணப்பதாரியினாலேயே விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உப புகையிரத நிலைய அதிபர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் - .......................... (இடைவெளியில் தான் விண்ணப்பித்த உப புகையிரத நிலையத்தின் பெயரைக் குறிப்பிட்டு) புகையிரத முகாமையாளர், தபால் பெட்டி இல. 355, புகையிரத முகாமை

யாளர் அலுவலகம், கொழும்பு 10'' எனும் முகவரிக்கு 2016.06.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது).

12. **விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தல்.-** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/ அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடத்திற்கு ரூபா 2,37,060 இற்கு குறையாத ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2016, மே 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான போட்டிப் பரீட்சை**

விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் (சிங்களத்தில்/ தமிழில்) : ☐

விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் (ஆங்கிலத்தில்) : ☐

1. (i) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
   (iv) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. நிரந்தர முகவரி :-
   (i) சிங்களத்தில்/ தமிழில் :----.
   (ii) ஆங்கிலத்தில் :----.
   (iii) தொலைபேசி இலக்கம் :- (வீடு) :----, கையடக்க : ----.

3. (i) பிறந்த திகதி :----.

   2016.06.20 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

   (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று)

   (ii) உயரம் :----.
   (iii) நெஞ்சளவு :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

5. மாவட்டம் (சிங்களத்தில்/ தமிழில்) : ☐

   ஆங்கிலத்தில் : ☐

6. பிரதேச செயலாளர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) : ☐

   (ஆங்கிலத்தில்) ☐

   கிராம அலுவலர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) : ☐

   (ஆங்கிலத்தில்) ☐

7. உமது நிரந்தர வசிப்பிடத்திலிருந்து நீர் விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையத்திற்குள்ள தூரம் (நேரடி தூரம்) கி. மீ. மூலம் குறிப்பிடவும் :----.

8. கல்வித் தகைமை :

   க. பொ. த. (சா. தரம்) :

| வருடமும் சுட்டெண்ணும் | பாடங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. வேறு தகைமைகள் :----.

10. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐

   (சிங்களம்/ தமிழ்) :

11. நீர் ஏதாவது குற்றம் காரணமாக நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டிருப்பின் விபரம் தருக :----.

12. ................................................... தபால் அலுவலகத்தில் ரூபா 500 ஐச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ................... ஐ உடைய காசுக் கட்டளையின் மூலப்பிரதியை இணைத்து அனுப்புகிறேன். (வேறு வழிகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப் படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும்.) :----.

13. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானதெனவும் பிழையானதெனவும் நான் நியமிக்கப்படுவதற்கு முன்பு கண்டு பிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதுடன் நியமனம் பெறப்பட்ட பிறகு கண்டு பிடிக்கப்படுமிடத்து எனது சேவையை முடிவுறுத்துவதற்கு ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் .................... ஐ உடைய திரு. ............................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும் அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(இறப்பர் இலச்சினையை பொறிக்கவும்.)

5-598

## திருத்தம்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014

2016.01.14 ஆந் திகதிய 1950 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட குறித்த பரீட்சையின் விண்ணப்பங்கள் கோரப்பட்ட அறிவித்தலின் 03 III மற்றும் IV பந்தி கீழ்க்காணப்படும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது :

(iii) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சதவீதங்கள் :

| | |
|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட | 40% |
| சேவைகள் அனுபவம் மற்றும் திறமை | 60% |

(iv) அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 4 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 25% ஆகவும் சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 75% ஆகவும் காணப்பட வேண்டும். அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 3 ஆகக் காணப்படுமிடத்து மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 33.33% ஆகவும் சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 66.66% ஆகவும் காணப்பட வேண்டும்.

(v) விசேட தரத்திற்கு அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 3 இற்கு குறைவாக இருப்பின் உத்தியோகத்தர்களின் சேவை அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016. மே 6.

5-697

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.